**சி.பி.எண்.15/2026** **13.07.2026**

**ம.த.சாட்சி –1 திரு. பன்னீர்செல்வம் குறுக்கு விசாரணை**

17.04.2020 தேதியன்று என் பணியிடை சம்மந்தப்பட்ட கடிதமானது என் வீட்டின் சுவற்றில் எதிர்மனுதாரரால் ஒட்டப்பட்டது. இந்த விவரத்தை நான் என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். அந்த கடிதத்தை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நிர்வாகம் அந்த கடிதத்தை பொது இடத்தில் தான் ஒட்டினார் என்னுடைய வீட்டில் ஒட்டவில்லை. 12.06.2020 மற்றும் 20.08.2020 ஆகிய தேதிகளில் நான் ஏன் பணிக்கு வரவில்லை என்று கேட்டு எதிர்மனுதாரர் எனக்கு கடிதங்கள் அனுப்பினார் என்றால் சரியல்ல. ம.த.சா.ஆ.1 நான் அனுப்பிய கடிதம் என்றால் சரிதான். அதில் என்ன விவரம் உள்ளது என்று எனக்கு தெரியாது. 25.10.2022 அன்று நான் அப்போதைய சங்கத்தலைவரிடம் நான் தவறு செய்யாமல் வேலைக்கு வருவேன் என்று கூறி கடிதம் அளித்தேன் என்றால் சரிதான். அந்த கடிதம் **எ.ம.த.சா.ஆ.1.** அப்போது இருந்த சங்கத் தலைவர் என்னிடம் அவ்வாறு எழுதி வாங்கினார். சங்கத் தலைவர் எழுதி கொடுத்தால் தான் வேலைக்கு அனுமதிப்பேன் என்று கூறியதால் தான் அதை ஒத்துக்கொண்டு அந்த கடிதம் எழுதி கொடுத்தேன். 17.04.2020 முதல் 31.10.2022 வரை நான் பணிக்கு வரவில்லை அந்த நாட்களுக்கு சம்பளம் கோரமாட்டேன் என்றும் அந்த கடிதத்தில் நான் குறிப்பிட்டு இருந்தேன் என்றால் சரிதான். என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் நான் ஒரே தேதியில் சேர்ந்த நபர்களுக்கு அடிப்படை ஊதியத்தை நிர்வாகம் உயர்த்தி கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். வெங்கடேசன் என்பவர் தொழிலாளர் உதவி ஆணையர் முன்பு மனு கொடுத்ததின் அடிப்படையில் தான் அவருக்கு ஊதிய உயர்வு அளிக்கப்பட்டது என்றும் நான் அவ்வாறு மனு எதுவும் அளிக்காததால் எனக்கு அவ்வாறு அளிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வெங்கடேசன் நான் பணிக்கு வராத காலக்கட்டமான 17.04.2020 முதல் 31.10.2022 வரையிலான காலத்தில் தான் மனு அளித்தார் என்றும் நான் அப்போது பணியில் இல்லாததால் எனக்கு வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு தடைப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல அவருக்கு அளிக்கும் பொழுது நான் பணியில் தான் இருந்தேன். மேலும் நான் போனஸ் தொகையாக ரூபாய் 9802 கோருகிறேன் நான் பணிக்கு வராமல் இருந்ததால் தான் எனக்கு போனஸ் தொகை

வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் உண்மையான சங்கதிகளை மறைத்து பொய்யான தகவல்களை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 17.04.2020 தேதியிட்ட பணியிடை மாறுதல் கடிதம் பெற்றப் பின்பு நான் 31.10.2022 வரை பணிக்கு வரவில்லை என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரர்களிடம் தொடர்ந்து பணி கேட்டுக்கொண்டு தான் இருந்தேன். அதன்பின்பு எதிர்மனுதாரர் 2022ம் ஆண்டில் தான் எனக்கு வேலைக்கொடுத்தனர். நான் பொய்யான தகவல்களை கூறி மனு தாக்கல் செய்துள்ளதால் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு எதிர்மனுதாரர் பணியிடை மாற்றம் தான் அளித்தனர் என்றும் என்னை வேலை விட்டு நீக்கவில்லை என்றால் சரியல்ல. நானே அதனை ஒப்புக்கொண்டு ஆரணி பால் உற்பத்தியாளர் சங்கத்தில் மனு அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நிர்வாகம் மாறிய உடன் அந்த தகவல்களை மறைத்து தற்போதுள்ள நிர்வாகத்திற்கு எதிராக இந்த மனுவை பொய்யான தகவல்களை கூறி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2026.07.13 15:02:05 +0530

Presiding Officer,
Additional Labour Court,
Vellore.